


தினமலர்
website: www.dinamalarnellai.com
நிறுவனர் டி.வி. ராமசுப்பையர்
www.facebook.com/dinamala
திருநெல்வேலி ♦ வெள்ளி ♦ ஜூலை 21 2017
சென்னை, வேலூர், பாண்டிச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோ

SRI SARADA COLLEGE
SARADA LIBRARY

# பாளை., சாரதா கல்லூரியில் சுய உதவிக்குழு சந்தை துவக்கம்

திருநெல்வேலி,
ஜூலை 21–

பாளை., சாரதா கல்லூரியில் மகளிர் சுய உதவிக் குழுவின் கல்லூரி சந்தை துவங்கியது.

பாளை. சாரதா கல்லூரியில் கல்லூரியில் மகளிர் சுய உதவி குழுவின் கல்லூரி சந்தை துவக்க விழா நடந்தது. முதல்வர் மலர்விழி வரவேற்றார்.

கல்லூரி செயலர் சரவணபவப்ரியா அம்பா தலைமை வகித்தார்.

நிர்வாகி பக்தானந்த மகராஜ் சுவாமி ஆசி வழங்கினார்.

மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணை இயக்குனர் கெட்சி லீமா அமலினி சந்தை விற்பனையை துவக்கி வைத்தார்.

பேராசிரியைகள், மாணவிகள், உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் கலந்து கொண்டனர்.



பாளை., சாரதா கல்லூரியில் மகளிர் சுயஉதவிக் குழுவினரின் சந்தை துவக்க விழா நடந்தது.

கல்லூரி சந்தையில் ஊரக பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள், வீட்டு அலங்கார பொருட்கள், கற்றாழை நார் உற்பத்தி பொருட்கள், பனை ஓலை பொருட்கள், அலங்கார சணல் பைகள், மகளிருக்கு தேவையான துணிகள், செயற்கை ஆபரணங்கள், சிறுவர் விளையாட்டு பொருட்கள்,, இயற்கை உணவு வகைகள் மற்றும் பல வகையான பொருட்கள் உற்பத்தி செய்யும் விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன.

கல்லூரி சந்தை நாளை 22ம் தேதி வரை நடக்கிறது.

ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அதிகாரிகள் மற்றும் மாணவிகள் செய்திருந்தனர்.